සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	වරලාරු - I	කාලය நேரம் Time	01 මණි

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

කවනික්කුක.

- ❖ එල්ලා විනාක්කලුක්කුම් විටෙ තරුක.ඉව් විනාත්තාලුක්කු 80 පුළ්ළිකළ් වළංකප්පටුම්.
- ❖ 1 – 40 වරෙයාන විනාක්කළිල් වළංකප්පට්ටුළ්ළ විටෙකළිල් ඉරුන්තු සරියාන අල්ලතු මිකප් පොරුත්තමාන විටෙයෙ තෙරිවු සෙය්තු විටෙත්තාළිල් පුළ්ළටි ඉටුක.

---

1) இலங்கை வரலாற்றை கற்பதற்காக பயன்படுத்தப்படும் புராதன இலக்கிய மூலாதாரம் யாது ?

1. தீபவம்சம் 2. மகாவம்சம் 3. போதிவம்சம் 4. தாதுவம்சம்

2) சீகிரிய கிறுக்கல் கவிதைகள் பின்வரும் எந்த மூலாதாரத்தில் அடங்கும் ?

1. கல்வெட்டு 2. குன்றுக் கல்வெட்டு 3. குகைக் கல்வெட்டு 4. சுவர் கல்வெட்டு

3) கற்கால மனிதர்கள் வாழ்ந்த ஈரவலய திறந்தவெளி வாழ்விடமாவது,

1. ஹோட்டன் சமவெளி 2. பண்டாரவளை
3. பெல்லன்பெந்தி பெலஸ்ஸ 4. பதிராஜவெல

4) A,B நிரல்களை இணைத்து சரியான விடையை தெரிவு செய்து செய்க.

I.	பௌத்த இராசதானி தொடர்பானது	A.	ரொபட் நொக்ஸ்
II.	இலங்கையின் வரலாறு	B.	பிளினி
III.	அன்றைய இலங்கை	C.	பாஹியன் தேரர்
IV.	நெசுராலிஸ் ஹிஸ்டோரியா	D.	பிலிப்ஸ் பால்தியஸ்

1. ABCD 2. CBAD 3. CDAB 4. CBDA

5) புராதன கால சேனைப் பயிர்ச்செய்கையின் போது மேற்கொள்ளப்படக்கூடாது என விலக்கப்பட்ட ஒரு செயலாவது,

1. சுத்திகரிக்கப்பட்ட காட்டுப் பகுதிக்கு தீமூட்டல்.
2. வனவிலங்குகளை அப்பகுதியில் இருந்து விரட்ட சப்தமிடல்.
3. பயிர் நிலத்தில் உள்ள பாரிய மரங்களை வெட்டியகற்றுதல்.
4. ஒரிருமுறை பயிர் செய்து விட்டு அந்நிலத்தை கைவிடல்.

6) இலங்கையின் புராதன கல்வெட்டுக்களில் “பனபெடிக” என குறிப்பிடப்பட்டுள்ள அரச அதிகாரி யார் ?

1. அரச செயலக தலைவர் 2. வர்த்தக நடவடிக்கைக்கான தலைவர்
3. காசு அச்சிடும் பிரிவு தலைவர் 4. நகர கட்டட நிர்மாணி

Past Papers Wiki

7) புராதன நீர்ப்பாசனத்துறையில் "தண்ணீர் விளக்கு" எனும் சொல்லால் குறிப்பிடப்பட்டது,

1. நீரைச் சேமித்து வைக்க பயன்படுத்தப்பட்ட மட்பாத்திரமாகும்.
2. இரவு நேரங்களில் மதகுக்கு அண்மையில் பொருத்தி வைக்கப்பட்ட விளக்காகும்.
3. மதகின் நீரைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்ட தடியாகும்.
4. மடைக்கதவுக்கு குறுக்காக அமைக்கப்பட்ட கற்றூண் ஆகும்.

8) புராதன நிர்வாக அமைப்பில் நாட்டின் மிகச் சிறிய நிர்வாக அலகின் நிர்வாக அதிகாரிகளை அழைக்க புராதன கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்,

1. கமிக 2. பருமக 3. பருமகலு 4. குருஹபதி

- பின்வரும் அட்டவணையை பயன்படுத்தி 9ம், 10ம் வினாக்களுக்கு விடை தருக.

நாடு	விஞ்ஞானி	கண்டுபிடிப்பு
A. போலந்து	D. கலிலியோ கலிலி	G. தொலைக்காட்டி
B. இங்கிலாந்து	E. ஐசக் நியூட்டன்	H. புவி உருண்டையானது
C. இத்தாலி	F. நிக்கலஸ் கொப்பர்நிக்கஸ்	I. புவியீர்ப்புச் சக்தி

9) புவி உட்பட அனைத்துக் கோள்களும் சூரியனைச் சுற்றி பயணிக்கின்றன என்ற கண்டுபிடிப்புக்கான சரியான விடைத் தொகுதி,

1. ADG 2. AFH 3. BFH 4. CEI

10) விண்வெளியில் காணப்படும் வஸ்துக்களை ஆராய்தலுடன் தொடர்புடைய சரியான விடை,

1. CEG 2. BEH 3. CDG 4. AEG

11) "தடிக சுமண" எனும் யானைத் தந்த சிற்பி தொடர்பான விபரம் அடங்கிய கல்வெட்டு யாது ?

1. வேகிரிய கல்வெட்டு
2. முதுகல்ல கல்வெட்டு
3. கொண்டவெட்டுவான் கல்வெட்டு
4. சொரபொரவாவி கல்வெட்டு

12) வசப மன்னன் பாரிய குளங்களை அமைப்பதில் கவனம செலுத்தியமையில் செல்வாக்கு செலுத்திய பிரதான காரணமாக கருதக்கூடியது,

1. பயிர் நிலங்களுக்குத் தேவையான நீரைப் பெற்றுக் கொள்ளுதல்.
2. வெளிநாடுகளிலிருந்து இந்நாட்டுத் தானியங்களுக்கு ஏற்பட்ட கேள்வியை பூர்த்தி செய்தல்.
3. வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துதல்.
4. நகர மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்தல்.

13) புராதன ஆட்சியாளர்கள் மக்களின் நலன்புரி நடவடிக்கைகளில் கவனம் செலுத்தினார்கள் என்பதற்கான ஆதாரமாவது,

1. கைத்தொழில் துறை முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை எடுத்தார்கள்.
2. மதத்தலங்களுக்கு காணிக்கைகள் வழங்கினார்கள்.
3. சூழலை பாதுகாப்பதற்காக சட்டங்களை இயற்றினார்கள்.
4. சுகாதார வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தார்கள்.

14) அநுராதபுரம் நகரமயமாக்களுக்கு உட்பட்டமைக்கான பிரதான காரணியாவது,

1. சர்வதேச வர்த்தகம்
2. விவசாய நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான பௌதீக காரணிகள் காணப்பட்டமை.
3. மல்வத்து ஓயாவை அண்மித்த பகுதிகளில் பாரிய குளங்களை அமைப்பதற்கான வசதி காணப்பட்டமை.
4. பலமான ஆட்சியாளர்கள் ஆட்சிபீடம் ஏறியமை.

15) கி.பி.7ம் நூற்றாண்டு காலத்தில் இலங்கை கிழக்குப் பகுதிகளில் கடற்கரையை அண்மித்து வாழ்ந்த தமிழ் மக்களின் புனிதத்தலமாக மாறிய இந்துக் கோயில் யாது ?

1. திருக்கேதீஸ்வரம் கோயில்
2. முன்னேஸ்வரம் கோயில்
3. கோணேஸ்வரம் கோயில்
4. நல்லூர் கந்தசுவாமி கோயில்

16) புராதன காலத்தில் நீளத்தை அளவிட பயன்படுத்திய மிகச் சிறிய அலகு யாது ?

1. அங்குலம்
2. குஞ்சா
3. பரமாணு
4. தரண

17) மானவர்ம பரம்பரை ஆட்சியாளர்களால் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் "வதால" எனும் சொல் மூலம் குறிப்பிடப்படுவது,

1. சட்டசபை
2. நிர்வாக சபை
3. அரச சபை
4. நீதிமன்றம்

18) தென்கிழக்காசியாவின் நிர்மாணக் கலையம்சங்களை காணக்கூடிய பொலன்னறுவைக் கால கலை நிர்மாணமாவது,

1. பராக்கிரமபாகுவின் அரசமாளிகை
2. ஆலாஹன பிரிவெனா
3. பொத்குல் விஹாரை
4. ஏழடுக்கு மாளிகை

19) முற்காலங்களில் சிற்றுண்டியாக பயன்படுத்தப்பட்ட "திலசங்குலிகா" எனும் உணவைப் பற்றி குறிப்பிடப்படும் இலக்கிய மூலாதாரம் யாது ?

1. சத்தர்மலங்காரய
2. தம்பியா அட்டுவாகட்டபதய
3. சத்தர்மரத்னாவலிய
4. சஹஸ்ஸலவத்துதூபகரனாய

- பின்வரும் தகவல்களை அவதானித்து 20,21ம் வினாக்களுக்கு விடைத் தருக.

A. பெலிகலவில் தளதாமாளிகை அமைத்து பிரதிஷ்டை செய்தல்.
B. 6ம் புவனேகபாகு மன்னனை எதிர்த்து சிங்கள சங்கய எனும் கலவரம் ஏற்படல்.
C. கலிங்கராயர்,சோடங்கன் எனும் சேனாதிபதிகள் இலங்கையை ஆக்கிரமித்தல்.
D. இப்னுபதூதா எனும் எனும் அரேபிய தேச சஞ்சாரியின் வருகை

20) தம்பதெனிய, யாப்பஹுவ இராசதானி காலங்களில் ஏற்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய விடை,

1. Aயும் Bயும்
2. Cயும் Dயும்
3. Aயும் Cயும்
4. Bயும் Cயும்

21) கம்பளை,கோட்டை இராசதானி காலங்களில் ஏற்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய விடை யாது ?

1. Bயும் Cயும்
2. Aயும் Cயும்
3. Cயும் Dயும்
4. Bயும் Dயும்

22) யாழ்ப்பாண வைபவ மாலை எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் யாழ்ப்பாண இராசதானியின் முதலாம் அரசன் யார் ?

1. குலசேகரன்
2. விக்ரமன்
3. விஜய கூலங்கை
4. வரோதயன்

23) இரண்டாம் இராஜசிங்கன் எனும் பெயரில் மலையக இராசதானியின் அரசனாக முடிசூடிக் கொண்டவர் யார்?

1. டிகிரி பண்டார இளவரசன்
2. மகா அஸ்தான குமாரன்
3. கொனப்பு பண்டார
4. யமசிங்க பண்டார

24) மலையக இராசதானி காலத்தில் அரச மாளிகையின் பயன்பாட்டுக்காக வேறாக்கப்பட்ட காணிகள் எவ்வாறு அழைக்கப்பட்டது ?

1. கபாடகம் 2. பரவேனிகம் 3. நிந்தகம் 4. விஹாரகம்

25) "டிவினா கொமடியா" எனும் கவிதைத் தொகுப்பை எழுதிய மனிதபிமான சிந்தனையுடைய எழுத்தாளர் யார்?

1. பிரன்சிஸ் பெட்ராக் 2. பிரான்சிஸ் பேக்கன்
3. வில்லியம் சேக்ஸ்பியர் 4. அலகியரி டான்டே

26) மறுமலர்ச்சிக் காலத்தில் புதிய சித்திரக் கலைப் படைப்புக்கள் உருவான நகரம் யாது ?

1. ஜினோவா 2. உரோம் 3. வெனிஸ் 4. புளோரன்ஸ்

27) மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட உலகமயமாதல் சிறப்பம்சம் ஒன்றல்லாதது,

1. அச்சியந்திரக் கைத்தொழில் உலகம் முழுவதும் பரவலடைதல்.
2. தொழிநுட்ப, விஞ்ஞான அறிவு உலகம் முழுவதும் பரவலடைதல்.
3. கொன்ஸ்தந்திநோபிள் நகரம் துருக்கியர் வசமாதல்.
4. நாடுகாண் பயணங்கள் மூலம் புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்படல்.

28) பயிர்ச் செய்கை நடவடிக்கைகளின் போது நில மாற்றுமுறைப் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் கிடைத்த நன்மையாவது,

1. நடுகைக்குப் பயன்படுத்தப்படும் வித்துக்களின் அளவை குறைக்க முடியுமானது.
2. நோய் பரவலடைதல் குறைந்தது
3. பாரிய அளவிலான விவசாயப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டது.
4. அறுவடைக்கு நீண்ட காலம் எடுக்கும் பயிர் இனங்கள் குறைவடைந்தது.

29) முதன்முதலாக குதிரை வண்டிகளை பயன்படுத்தி தபால் சேவையை ஆரம்பித்த ஆசிய நாடு எது ?

1. இந்தியா 2. சீனா 3. இலங்கை 4. ஜப்பான்

30) கி.பி.1848ம் ஆண்டில் ஏற்பட்ட பிரித்தானியருக்கு எதிரான கலவரம் வலுவடைந்த பகுதி யாது ?

1. குருநாகலை 2. கண்டி 3. மாத்தளை 4. வெல்லஸ்ஸ

31) இலங்கையின் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் யாது ?

1. லுணுவில 2. தலவாக்கலை 3. வாரியபொல 4. அகலவத்தை

32) மகாவலி பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் மூலம் அமைக்கப்பட்ட கொத்மலை நீர்த்தேக்கத்திற்கு உதவி செய்த நாடு எது ?

1. சுவீடன் 2. பிரித்தானியா 3. மேற்கு ஜெர்மனி 4. கிழக்கு ஜெர்மனி

- 33,34ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் கூற்றுக்களை அவதானிக்குக.

A. உத்தியோகப்பற்றல்லாதவர் தொகை அதிகரித்தல்.
B. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்படல்.
C. இனவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்படல்.
D. மாகாணவாரியான பிரதிநிதித்துவமுறை அறிமுகப்படுத்தப்படல்.
E. முதன்முறையாக படித்த இலங்கையர் ஒருவர் சட்டசபைக்கு வாக்குரிமை வாக்குரிமை மூலம் நியமிக்கப்படல்.

33) குறுமக்கலம் சீர்த்திருத்தத்துடன் தொடர்புடைய கூற்றுக்கள் யாவை ?

1. Aயும் Cயும் 2. Bயும் Dயும் 3. Bயும் Eயும் 4. Eயும் Dயும்

34) மனிங் சீர்த்திருத்தத்துடன் தொடர்புடைய விடயங்கள் அடங்கிய சோடி யாது ?

1. Aயும் Cயும் 2. Aயும் Dயும் 3. Bயும் Cயும் 4. Dயும் Eயும்

35) 1978 யாப்புச் சீர்த்திருத்தத்தின் அடிப்படையில் அரச தலைவர் என்ற முறையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விசேட வரப்பிரசாதம் யாது ?

1. ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்ய முடியாது.
2. நீதிமன்றம் மூலம் குற்றவாளியாக்கப்பட்ட ஒருவருக்கு மன்னிப்பு வழங்கலாம்.
3. அரச விழாக்களில் தலைமை தாங்குதல்.
4. சர்வதேச விழாக்களில் குடியரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதியாக கலந்து கொள்ளல்.

- பின்வரும் கூற்றுக்களில் முதலாவதற்கும் இரண்டாவதற்கும் இடையில் காணப்படும் பொருத்தப்பாட்டை அவதானித்து 36 – 39 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A. (1). புதிய முத்திரைச் சட்டம்
(2). பிரித்தானியா பொருட்களை பகிஷ்கரித்தல்

B. (1). நம்பிக்கைப் பொறுப்புச் சபை
(2). நம்பிக்கைப் பொறுப்புப் பிரதேசங்கள் சுதந்திரமடைதல்

C. (1). சமவுடமைக் கொள்கை
(2). ரஷ்யப் புரட்சி

D. (1). தேசாதிபதி
(2). பெயரளவிலான நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி

36) முதலாவது இரண்டாவதன் விளைவு என காட்டக்கூடிய சோடியாவது,

1. A 2. B 3. C 4. D

37) இரண்டாவது நடைபெற முதலாவது கூற்று கரணமானது எனக் கூறக்கூடியது,

1. A 2. B 3. C 4. D

38) இரண்டாவது காரணமாக முதலாவது முடிவுக்கு கொண்டு வரப்பட்டது எனக் கூறக்கூடிய சோடி,

1. A 2. B 3. C 4. D

39) முதலாவது கூற்றுக்கும் இரண்டாவது கூற்றுக்கும் எவ்வித தொடர்புமற்ற சோடியாவது,

1. A 2. B 3. C 4. D

40) ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நீதிமன்றமான சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ள இடம் யாது ?

1. நெதர்லாந்தின் ஹேக் நகரம்
2. அமெரிக்காவின் நியூயோர்க் நகரம்
3. போர்த்துக்கல்லின் லிஸ்பன் நகரம்
4. சுவிஸ்லார்ந்தின் ஜெனீவா நகரம்

PAST PAPERS WIKI

****

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	වරලාරු - II	කාලය நேரம் Time	3மணி 10நி

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

අறிவுறுத்தல்கள்

- ❖ மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்களாகும்.
- ❖ பகுதி I முதலாம் வினா கட்டாயமானது.
- ❖ பகுதி II ல் நான்கு வினாக்களுக்கும் பகுதி III ல் ஒரு வினாவுக்கும் விடை தருக.
- ❖ விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை ஆறாகும்.விடைகளுக்கு 120 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி I

01) (அ). வினா I ல் தரப்பட்டுள்ள வரலாற்றுத்தலங்களை தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும், வினா II ல் வழங்கப்பட்டுள்ள இடங்களை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

I. தம்பதெனிய, பூநகரி, ஹமன்ஹெல், ரந்தம்பே, கவுடுளு வாவி, நில்வளா கங்கை, கல் ஓயா, முல்லேரியா, இப்பன்கட்டுவ, லுணுவில, சமந்தகூடம்,கோதபப்பத (12 புள்ளிகள்)

II. பிரான்ஸ், பாண்டிச்சேரி, ஹிரோசிமா, பால்டிக் கடல், இஸ்ரேல், பத்தேவியா (06 புள்ளிகள்)

(ஆ). பின்வரும் A, B, C, D வினாக்களுக்கான விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A- பொருளாதார பலத்தின் அடிப்படையில் செல்வந்தர்கள், ஏழைகள் என சமூகம் பிரிந்து செல்வது எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

B- மறுமலர்ச்சிக் காலத்தில் பிரான்சில் உருவான மனிதாபிமான சிந்தனையுடைய நூல் ஆசிரியர் யார் ?

C- மாயாதுன்னை மன்னனுக்கு கடற்படை உதவிகளை வழங்கிய கள்ளிக்கோட்டை மன்னன் யார் ?

D- 1972 யாப்புச் சீர்திருத்தத்தில் சட்டவாக்க சபை எப்பெயரால் அழைக்கப்பட்டது ?

(04 புள்ளிகள்)

- A,B யில் உள்ள படங்களை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.


A. I. உரு A யில் காட்டப்படுவது யாது ?

II. இது எங்கு கண்டெடுக்கப்பட்டது ?

III. இதனை எதற்காக பயன்படுத்தினார்கள் ?

IV. இதனை யார் பயன்படுத்தினார்கள் என நம்பப்படுகின்றது?

(04 புள்ளிகள்)



உரு A

B. I. உரு B யில் காட்டப்படுபவர் யார்?

II. சோல்பரி யாப்பின் மூலம் இவருக்கு வழங்கப்பட்ட பதவி யாது ?

III. 1972ம் ஆண்டு யாப்பில் இவருக்கு வழங்கப்பட்ட பதவி யாது ?

IV. 1972ம் ஆண்டு யாப்பின்படி இப்பதவிக்கு ஒருவரை நியமிக்கும் அதிகாரம் யாருக்கு வழங்கப்பட்டது ? (04 புள்ளிகள்)



உரு B

பகுதி II

02) I. (A). இலங்கையில் குடியேற்றங்களை உருவாக்கிய புராதன மானிடர்களுக்கு வழங்கப்பட்ட பெயர் யாது ? (01 புள்ளிகள்)

(B). இலங்கையின் கற்காலம் வேறுபடுத்திக் காட்டப்படும் இரண்டு காலப் பகுதிகளையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

II. இலங்கையின் கற்காலம் பற்றிய சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. முன்வரலாற்றுக் காலத்தையும், கற்காலத்தையும் வெவ்வேறாக அடையாளம் காட்டக்கூடிய பிரதான காரணிகள் இரண்டை விளக்கிக் கூறுக. (05 புள்ளிகள்)

IV. முன்வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் தன்மைகளை மூன்று காரணிகளூடாக தெளிவுபடுத்திக் காட்டுக. (06 புள்ளிகள்)

03) I. (A). கமிக தெரிவு செய்யப்பட்டது குருஹபதிகளில் இருந்தாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள மூலாதாரம் யாது ?

(B). கால்வாய்கள் மூலம் சிறு குளங்களை இணைத்து நீர் வழங்கும் தொகுதியை உலர்வலய மக்கள் எப்பெயர் கொண்டு அழைத்தனர் ?

(C). ருவன்வெலிசாய விஹாரையை அலங்கரிப்பதற்காக கண்ணாடிமணிகள் எந்நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டன ? (03 புள்ளிகள்)

II. இராசரட்டை நாகரீக காலத்தில் அரச உரிமை வழங்கப்பட்ட முறைகள் இரண்டை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. (A). இலங்கையின் பழைய பயிர்ச் செய்கை முறை யாது ? (01 புள்ளிகள்)

(B). அப்பயிர்ச் செய்கை முறையில் பயிரிடும் போது சுற்றாடலை பாதுகாப்பதற்கு விவசாய மேற்கொண்ட நடவடிக்கைகளை தெளிவுபடுத்துக. (04 புள்ளிகள்)

IV. புராதன கால இலங்கை மக்கள் இனங்களிடையே ஒற்றுமையை பேணி அந்நியோன்யமாக வாழ்ந்தார்கள் என்பதை மூன்று காரணிகளூடாக விளக்குக. (06 புள்ளிகள்)

04) I. முன்வரலாற்றுக்கால யுகத்தில் விஞ்ஞான தொழிநுட்ப அறிவை பயன்படுத்தியமையை நிருபிக்கக்கூடிய சான்றுகள் மூன்றை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. பின்வரும் A-D வரையான வினாக்களில் பொருத்தமான விடைகளை ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A. பெரிய மண்சாடிகள் பலவற்றை கிணற்றினுள் இறக்கி அடுக்கி சுவர் அமைத்து கட்டப்படும் கிணறு

B. கால்வாய் நிர்மாணப் பணிகளுக்கு பொறுப்பான அதிகாரி

C. எலஹர அணையை அமைக்க மறிக்கப்பட்ட ஆறு

D. பசு மாடுகளின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்ட பூஜை முறை (04 புள்ளிகள்)

III. இந்நாட்டு புராதன நீர் முகாமைத்துவ முறையின் சிறப்பை எடுத்துக் காட்டக்கூடிய சந்தர்ப்பங்கள் இரண்டை உதாரணங்களுடன் தெளிவுபடுத்திக் காட்டுக. (05 புள்ளிகள்)

IV. குளத்தின் பிரதான பகுதிகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றின் பயன்பாட்டையும் தெளிவுபடுத்திக் காட்டுக. (06 புள்ளிகள்)

05) I. மலையக இராசதானியின் ஆரம்ப ஆட்சியாளரிலிருந்து வரிசையாக ஆட்சிபீடமேறிய மூன்று அரசர்களின் பெயர்களை கூறுக. (03 புள்ளிகள்)

II. முதலாம் விமலதர்மசூரிய மன்னன் மலையகத்தை போர்த்துக்கேயர் ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாக்க மேற்கொண்ட இரண்டு போர்களை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. கண்டி இராசதானியின் பொருளாதார நடவடிக்கைகள் செயற்பட்ட முறையை இரண்டு காரணிகளூடாக தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

IV. கண்டி இராசதானியின் சமூக அமைப்பில் அவதானிக்கக்கூடிய இலட்சணங்கள் மூன்றைக் கூறி தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

06) I. பிரான்சியர் இந்தியாவில் அமைத்த வர்த்தக நகரங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. 1818 சுதந்திரப் போரட்டத்தை வழிநடத்தியமைக்காக ஆங்கிலேயர்களினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட மலையகப் பிரதானிகள் இருவரையும் பெயரிடுக. (04 புள்ளிகள்)

III. ஆங்கிலேயருக்கு மலையக இராசதானியை கைப்பற்றிக் கொள்ள வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்பதை இரண்டு காரணிகளூடாக தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

IV. 1815ல் ஆங்கிலேயர்களுக்கு மலையக இராசதானியை கைப்பற்றிக் கொள்ள சாதகமான அமைந்த மூன்று காரணிகனை விளக்குக. (06 புள்ளிகள்)

07) I. பின்வரும் இயக்கங்கள் மூலம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட வெளியீடுகள் மூன்றை கூறுக.

A. சேர்ச் மிசனரி சங்கம்

B. சமய பூஸ்திகா சங்கம்

C. பெப்டிஸ்ட் மிஷனரி (03 புள்ளிகள்)

II. 19ம் நூற்றாண்டில் இலங்கையின் வரலாற்று மூலாதாரங்கள் பற்றிய தொல்பொருள் ஆய்வு, அகழ்வு வேலைகளில் ஈடுபட்ட ஐரோப்பிய அறிஞர்கள் நால்வரைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. இலங்கை மக்களுக்கு அரசியல் அனுபவத்தை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கப் பெற்ற டொனமூர் யாப்பின் சீர்த்திருத்தங்கள் இரண்டை தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

IV. பிரித்தானியர் அறிமுகம் செய்து வைத்த தேயிலைப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்றைத் தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

பகுதி III

08) I. கைத்தொழில் புரட்சியின் போது பின்வரும் கண்டுபிடிப்பாளர்களின் படைப்புக்களை பெயரிடுக.

A. ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ்

B. ஹென்றி பேஸ்மர்

C. ஜேம்ஸ் வோட் (03 புள்ளிகள்)

II. கைத்தொழில் புரட்சியின் போது விவசாயத்துறையில் முன்னேற்றம் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் நான்கைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. கைத்தொழிற் புரட்சி மூலம் இலங்கையின் போக்குவரத்து துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டை தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

IV. கைத்தொழில் புரட்சி மூலம் ஏற்பட்ட சாதகங்கள் இரண்டையும் பாதகங்கள் ஒன்றையும் விளக்கிக் காட்டுக. (06 புள்ளிகள்)

09)I. அமெரிக்கா சுதந்திர போராட்டத்திற்கு வித்திட்ட புதிய வரிச் சட்டங்கள் மூன்றையும் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. பின்வரும் கூற்றுக்களுக்கு பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. "நானே அரசு. நான் விரும்பும் எதுவும் நடைபெறும்" என கூறிய மன்னன்

B. "இச்சந்தர்ப்பத்தில் நாம் ஆட்சியை கைப்பற்றிக் கொள்ள விட்டால் வரலாறு எமக்கு மன்னிப்பு வழங்காது" எனக் கூறிய ஆட்சியாளர்

C. "ஆயுத சக்தியின் மூலம் ஐந்து வருடங்களில் பெற்றுக் கொண்ட வெற்றியை பாதுகாக்க இன்னும் ஐம்பது வருடங்கள் ஆயுத பாணிகளாக இருக்க வேண்டும்" என கூறிய ஜேர்மனியின் சேனாதிபதி

D. "ஜேர்மனி இனத்தினர் தூய்மையான ஆரிய வம்சத்தின் மூலம் உருவான உலகின் உன்னத இனத்தவராகும்" எனக் கூறிய ஜேர்மனிய தலைவர்

(அடோலப் ஹிட்லர், வின்ஸ்டன் சேர்ச்சில், வொன்டர்வோல்ட், 16ம் லூயி, 14ம் லூயி, வீ.ஐ.லெனின்)

(04 புள்ளிகள்)

III. முதலாம் உலக மகா யுத்தத்திற்கான காரணங்கள் இரண்டைக் கூறி விளக்குக. (05 புள்ளிகள்)

IV. தற்கால உலகின் சமாதானத்தை பேணுவதற்காக ஐக்கிய நாடுகள் அமையம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றை விபரித்துக் காட்டுக. (06 புள்ளிகள்)

****

Past Papers Wiki

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025


ශ්‍රේණිය / தரம் / Grade	ඉතිහාසය / History / வரலாறு	සිතියම්
11 ශ්‍රේණිය	II / II / II	

නම / பெயர் / Name ..... විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. .....

(අ) (i)

1. (ஆ) (i)


(a) (i)



(ஈ) (ii)

1. (அ) (ii)

(a) (ii)



PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank